

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கரூர் மாவட்டம், கடவூர் வட்டம், பொன்னணியாறு அணை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், கண்ணூத்து ஏரிக்கு காவேரியில் வெள்ள காலங்களில் கிடைக்கும் உபரிநீரை நீரேற்றம் மூலம் கொண்டு செல்லும் திட்டத்திற்காக பொன்னணியாறு அணையை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநிலங்களவை உறுப்பினர் திருமதி ராஜாத்தி (எ) கவிஞர் சல்மா, மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல்சமது, தமிழ்நாடு ஏரி மற்றும் ஒன்றிய செயலாளர் ஸ்ரீரங்கன், ஆற்று பாசன விவசாய சங்க மாநில தலைவர் விஸ்வ நாதன், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், விவசாயப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ் ஆர்வலர்

# சிங்கப்பூர் போப்ராஜ் மறைவு!

## தமிழ் அமைப்புகள் சார்பில் அஞ்சலி!

சிங்கப்பூர், அக். 8 -

சிங்கப்பூரில் பல தமிழ் அமைப்புகளுக்கு நிதி ஆதரவு தந்து வந்த புரவலா ராகவும், திமுக மாநில இலக்கிய அணியின் புரவலராகவும் இருந்த போப்ராஜ் என்றழைக்கப்பட்ட நாகை.தங்கராஜ் அவர்கள் 5அக்டோபர்2025 ஞாயிறு அன்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



சிங்கப்பூரில் பல்வேறு தமிழ் கவிதை மற்றும் இலக்கிய நூல்கள் வெளியிடுவதற்கும் இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும் நிதி ஆதரவு வழங்கி வந்தது மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பல அறச்செயல்களைத் தொடர்ந்து செய்து வந்தவர் போப்ராஜ் அவர்கள்.

பயண முகவராகப் பணியாற்றிப் பின் சொந்தமாக ஜோஸ்கோ பயண நிறுவனத்தை கட்டியெழுப்பி வெற்றிகரமாக நடத்தி வந்தவர் போப்ராஜ் அவர்கள்.

கழகத்தின் மீதும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீதும் முதல்வர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் தீராப் பற்றுக் கொண்டவர். தி.மு.க இலக்கிய அணியின் முன்னாள் மா நிலத் தலைவர் தஞ்சைக் கூத்தரசன் அவர்களோடு நெருங்கிய நண்பராக இருந்தார். தி.மு.க இலக்கிய அணியின் சார்பில் அறிவாலயத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 86ஆவது பிறந்தநாள் விழா ஒன்றில், போப்ராஜ் அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றி இருக்கிறார்.

சென்ற ஆண்டு சிங்கப்பூரில் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் கலைஞர் நூற்றாண்டு விழாவை "கலைஞர் இலக்கியம் என்ற கருதரங்கமாக நடத்திய போது, அந்த நிகழ்வுக்குத் தலைமை ஏற்றதுடன், அந்த நிகழ்வின் முழுச்செலவையும் ஏற்றுக் கொண்ட, அவரின் அன்பை மதிப்புடன் நினைத்து அஞ்சலி செலுத்துகிறோம்.

இழப்பில் வாடும் நாகை தங்கராஜு அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் அறிவித்துள்ளனர்.

### பொதுத்துறை ஊழியர்களுக்கு போனஸ் –

# கருணைத் தொகை வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிக்கை!

சென்னை, அக். 8 -

தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி என்ற நோக்கோடு செயல்பட்டு வரும் நமது தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்த வளர்ச்சிக்கு காரணமான தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று ஊதிய ஒப்பந்தங்களை நிறைவேற்றி வருவதுடன், அவ்வப்போது குறைந்த பட்ச ஊதியத்தை மறுசீரமைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு, அதற்கான அரசாணைகளை வெளியிட்டு வருகிறது. தொழில் வளர்ச்சிக்கு தொழில் அமைதி இன்றியமையாதது என்ற சிந்தனையோட்டத்தோடு 'திராவிட மாடல்" அரசு, தலைவர் முத்துவேல் கரு



ணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

2024 மற்றும் 2025ம் ஆண்டிற்கு போனஸ் கோரிக்கைகள் வைக்கப்பட்ட நிலையில் அனைத்துத் தரப்பு தொழிலாளர்களுக்கும் மனநிறைவு தரக்கூடிய வகையில், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகித போனஸ் மற்றும் 11.67 சதவிகித கருணைத் தொகை என 20 சதவிகித போனஸ் அறிவித்தமைக்கும், இலாபம் ஈட்டும் பொதுத்துறை நிறுவ னங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 20 சதவிகித போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்கவும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பணிபுரிபவர்களுக்கு 8.33 சதவிகித போனஸ் 1.67 சதவிகித கருணைத் தொகை என 10 சதவிகித போனஸ் வழங்கவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் தற்காலிக தொழிலாளர்களுக்கு ரூ. 3000/- கருணைத் தொகை வழங்க உத்தரவிட்டமைக்கும்,

பல்வேறு கூட்டுறவு அமைப்பு மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்க உத்தரவிட்ட முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தொழிலாளர் முன்னேற்றச் சங்க பேரவை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்களின் முழக்கமான 'வெல்வோம் 200 - படைப்போம் வரலாறு" என்பதை உறுதிப்படுத்த களப்பணியாற்றுவோம் என்பதையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதி ஓசூர் மாநகர மேற்கு பகுதி வார்டு 1 முதல் 11 வரை 'மக்களைத் தேடி சட்டமன்ற உறுப்பினர்' என்ற நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் கலந்து கொண்டு அங்கிருந்த மக்களிடம் அடிப்படை வசதிகளை கேட்டு அறிந்து அவர்களின் கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என தெரிவித்து திராவிட மாடல் அரசின் "நாடு போற்றும் நான்காம் ஆண்டு" கையேட்டினை பொதுமக்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் சத்யா, மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன் , மாநகர துணை மேயர் ஆனந்தய்யா , மாநகர அவைத் தலைவர் செந்தில்குமார், மாநகர துணை செயலாளர் கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம்,அன்னவாசல் பேரூராட்சி மக்கள் மன்றத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் அன்னவாசல் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.சந்திரன், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, இலுப்பூர் வட்டாட்சியர் சக்திவேல், வட்டார வளர்ச்சி அலுவலர் இந்திராகாந்தி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ.பிரபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து பொதுமக்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.





மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமலஹாசன் அவர்கள், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.வுடன் சென்று, கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை, நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகள் வழங்கினார். மேலும் விபத்து நிகழ்ந்த இடத்தை ஆய்வு செய்தார். மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### உடனடியாக வந்து உயிர்சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய

# செந்தில் பாலாஜிக்கு நன்றி சொல்லாவிட்டாலும் இடையூறு செய்யாதீர்கள்!

## கரூர் துயர சம்பவ இடத்தை பார்வையிட்ட பின் கமலஹாசன் எம்.பி. பேட்டி!

கரூர், அக். 8 –

நேரத்திற்கு வந்து மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய செந்தில்பாலாஜிக்கு நன்றி சொல்லாவிட்டாலும் இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும் என கரூர் சம்பவ இடத்தை பார்வையிட்ட கமலஹாசன் எம்.பி. செய்தியாளர்களிடம் கூறினார்.

கரூர் வேலுச்சாமிபுரம் விஜய் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் மயக்கம் அடைந்து 41 பேர் இறந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து யாருக்கும் ஆறுதல் கூற விஜய் வரவில்லை. அறிவித்த உதவி தொகையையும் வழங்கவில்லை. அடுத்த கட்ட தலைவர்கள் கைதுக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர். இந்த சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காயம் அடைந்தனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 10 லட்சம், காயமடைந்த குடும்பத்திற்கு தலா ஒரு லட்சமும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. சம்பவம் நடந்தவுடன் இதை கேள்விப்பட்டு உடனடியாக கரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை அறிவித்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமலஹாசன் அவர்கள், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ உடன் சென்று, கரூரில் எதிர்பாராத கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை, நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். நிவாரண உதவிகள் வழங்கினார்கள்.

மேலும் விபத்து நிகழ்ந்த இடத்தை ஆய்வு செய்தார். கழக நிர்வாகிகள், மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்..

பகுதியை பார்வையிட்ட மக்கள் நீதி மையம் கட்சி தலைவர் கமலஹாசன், வேலுச்சாமி புரத்தைச் சேர்ந்த உயிரிழந்த மகேஸ்வரி (43 வயது) இல்லத்திற்கு சென்று அவரது உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். அப்போது நிவாரண உதவியாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை உறவினர்களிடம் வழங்கினார்.

பின்னர் கமலஹாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஊடகங்கள் வாயிலாக பல உண்மைகள் இன்று வெளிவந்துள்ளது. இது யாரையும் பாராட்டுவதற்கான நேரம் இல்லை. செந்தில் பாலாஜி உடனடியாக எப்படி வந்தார் என்ற குற்றச்சாட்டு வைக்கின்றனர். இது அவருடைய சொந்த ஊர், அவர் எப்படி உடனடியாக வந்தார் என்று கேள்வி எழுப்புவது தவறு. நேரத்துக்கு வந்து மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய செந்தில் பாலாஜிக்கு நன்றி சொல்ல வேண்டும்.இது அவர் ஏரியா.அவரது மக்கள். அவர் வராமல் யார் வருவார்கள்?.

பெரும் மக்கள் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றினார். அவருக்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டாம். இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும். அவர் செய்வதை செய்யட்டும். செந்தில் பாலாஜி ஏன் வந்தார் என கேட்பதைவிட வந்ததை நினைத்து சந்தோஷப்பட வேண்டும்.அது அவர் கடமை. என்ன முடியுமோ அதை செய்திருக்கிறார்

உயிரிழந்தவர்களை எத்தனை பேர் என்று எண்ணிக்கை அளவில் பார்க்க கூடாது. அவர்களுக்கும் குடும்பம் உள்ளது என்பதை பார்க்க வேண்டும். தமிழ்நாடு அரசும், முதலமைச்சர் அவர்களும், சிறப்பாக செயல்பட்டுள்ளனர். இது போன்ற கூட்டங்களை ஊரிலிருந்து ஒதுக்குப்புறமான இடங்களில் நடத்த வேண்டும்.

த.வெ.க. சார்பில் முன்னதாக அனுமதி கேட்கப்பட்ட லைட் ஹவுஸ் கார்னர் பகுதியில் ஆற்றில் மக்கள் விழுந்திருந்தால், இதை விட அதிக உயிர் சேதம் ஏற்பட்டிருக்கும்.

நான் பேசுவது மனிதம். எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்டோர் பேசுவது அரசியல். இந்த நேரத்தில் அரசியல் பேசுவது தவறு. அடுத்தடுத்த மாதங்களில் அது குறித்து பேசலாம். இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, அனைத்துக் கட்சிகளும் அமர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவெடுக்க வேண்டும். முதலமைச்சரும் அதற்கான சட்டத்தை இயற்ற வேண்டும்.

நாம் எவ்வளவு பணம் கொடுத்தாலும், உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஈடாகாது. யார் எவ்வளவு பணம் கொடுத்தார் என்று போட்டி வேண்டாம். அவர்களுக்கு நீதி தான் வேண்டும். இது யாரையும் குற்றம் சொல்வதற்கான நேரமில்லை. இதில் நான் உட்பட அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். அதே சமயத்தில், குற்றம் சாட்டுபவர்கள் யார் என்பதையும் பார்க்க வேண்டும்.

விஜய்க்கு நான் அறிவுரை சொல்லத் தேவையில்லை. நான் என் சார்பில் மட்டுமே பேச வந்திருக்கிறேன். அரசியலில் என்னை விட மூத்தவர்கள் உள்ளனர். அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகளை நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது. காலம் கடந்து அறிவுரை சொல்வதில் அர்த்தம் இல்லை.

இனி அவர் ஒரு தலைவராக செய்ய வேண்டியதை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். நான் எவ்வளவு நிதி உதவி கொடுத்தேன் என்று சொல்லிக்காட்டுவது அசிங்கம். சட்டம் ஏற்பாடு செய்து வருகிறது. எஸ்ஐடி. குழு அமைக்கப்பட்டுள்ளது. நாம் விசாரிப்பதை விட குழுவின் விசாரணை ஆழமாகவும், உறுதியாகவும், நேர்மையாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். விஜய்க்கு என்ன அறிவுரை கூறுகிறீர்கள் என நீங்கள் கேட்கிறீர்கள். நீதிமன்றம் சொல்லும்.

இவ்வாறு அவர் கூறினார்.




தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் பட்டீஸ்வரம் கடைவீதியில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா சிறப்புரையாற்றினார், கழக பாடகர் இறையன்பு குத்தூஸ் கழக பாடல்களை பாடினார். பொதுக்கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர் எஸ்.கே.முத்து செல்வம் தலைமை வகித்தார். கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கோ.வி.அய்யாராசு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி உள்ளிட்ட ஒன்றியக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.